# சென்னை சகோதயா கூட்டமைப்பு பள்ளிகளுக்கான மாதிரி பொதுத்தேர்வு – 2020

# தமிழ்

**வகுப்பு : பத்து** | **மதிப்பெண்கள் : 80**
**கால அளவு : 3 மணி நேரம்**

## பகுதி – அ (படித்தல்) மதிப்பெண்கள் - 15
**SECTION - A (Reading) Marks – 15**

**1. கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (5X1 = 5)**

ஜார்ஜ் எவரெஸ்டின் பணிக் காலத்தில் ராதாநாத் சிக்தார் என்ற இந்திய இளைஞர் கணிதத் திறமையும் துடிப்புடன் பணியாற்றுபவராகவும் இருந்தார். ஜார்ஜ் எவெரஸ்ட் அவரை, டேராடூனில் உள்ள ஆய்வு மையத்தில் பணியாற்ற அழைத்துக் கொண்டார். அந்த இளைஞர் நில அளவையைத் துல்லியமாகக் கணக்கிட தானே ஒரு புதிய முறையை உருவாக்கினார். அவரால் எந்த இடத்தையும் துல்லியமாக அளவிட முடிந்தது. டார்ஜிலிங்கில் இருந்து இமயமலையின் சிகரங்களை ஆறு கோணங்களில் துல்லியமாக அளந்தார். முடிவில் 1852ம் ஆண்டு, ராதாநாத் சிக்தார் இந்தியாவின் மிக உயரமான சிகரமாக இமயமலையின் 15-வது சிகரம் உள்ளது என்பதைக் கண்டறிந்து சொன்னார். அப்படி அவர் கண்டுபிடித்த சிகரம் 29,002 அடி உயரம் கொண்டது.

தனக்கு முந்தைய ஜெனரல் ஜார்ஜ் எவரெஸ்டின் நினைவைக் கொண்டாடும் வகையில் ஆண்ட்ரு ஸ்காட் வாக் உலகின் மிக உயரமான அந்தச் சிகரத்துக்கு எவரெஸ்ட் பெயரைச் சூட்டினார். அப்படித்தான் நேபாளிகளின் கோமோலுங்குமா சிகரத்துக்கு, எவரெஸ்ட் என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது.

இன்றும் சீனர்கள் எவரெஸ்ட் சிகரத்தை ‘‘ஷெங்மூபெங்’’ என்றுதான் அழைக்கிறார்கள். அந்தப் பெயருக்கு ‘‘புனித அன்னை’’ என்று பொருள். வெள்ளைக்காரர்கள் கண்டறிவதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே, அந்த மலைச் சிகரத்தை நேபாளிகள் அடையாளம் கண்டு அதற்கு கோமோலுங்குமா என்று பெயரும் சூட்டி இருக்கிறார்கள். நேபாளத்தில் வாழும் ஷெர்பாக்கள் அந்த மலையின் உச்சியில் தங்களது குலக்கடவுள் வசிப்பதாக நம்புகிறார்கள்.

**வினாக்கள்:**

1) எவரெஸ்ட் சிகரத்தை நேபாளிகள் என்ன பெயரிட்டு அழைத்தனர்?
அ) ஷெங்மூபெங் ஆ) ஷெர்பாக்கள்
இ) எவரெஸ்ட் ஈ) கோமோலுங்குமா

2) ராதாநாத் சிக்தார் இமயமலையின் சிகரங்களை எத்தனை கோணங்களில் அளந்தார்?
அ) 15 ஆ) 29,002 இ) 6 ஈ) 1852

3) ஷெங்மூபெங் - பொருள் எழுதுக.
அ) புனித அன்னை ஆ) குலக்கடவுள்
இ) வெள்ளைக்காரர்கள் ஈ) சிகரம்

4) ராதாநாத் சிக்தார் பணியாற்றிய ஆய்வு மையம் எங்குள்ளது?
அ) சீனா ஆ) டேராடூன் இ) இமயமலை ஈ) நேபாளம்

5) சீனர்கள் எவரெஸ்ட் சிகரத்தை என்ன பெயரிட்டு அழைக்கிறார்கள்?
அ) கோமோலுங்குமா ஆ) எவரெஸ்ட்
இ) ஷெர்பாக்கள் ஈ) ஷெங்மூபெங்

**2. கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (5x 1 = 5)**

சங்க இலக்கியங்கள் கொற்கையின் சிறப்பைப் பாடுகின்றன. சங்க காலத்தில் பெரிய துறைமுக நகரமாக இருந்த கொற்கை இன்று ஒரு சிற்றூராக சுருங்கியிருக்கிறது. இதற்கு நேர் எதிராக ஒரு காலத்தில் சிறிய கிராமமாக இருந்த சென்னை இன்று பெருநகரமாக வளர்ந்து விஸ்வரூபமெடுத்து நிற்கிறது. கொற்கை, இன்று கடலில் இருந்து ஆறு கிலோமீட்டர் தூரம் தள்ளியிருக்கிறது. கடல் உள்வாங்கிப் போனதே இதற்குக் காரணம் என்கிறார்கள். கொற்கையில் இருந்து பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில்தான் ஆதிச்சநல்லூர் உள்ளது. ஆதிச்சநல்லூர் மிகவும் புராதனமான புதைமேடு. கால்டுவெல் பாதிரியார் சமயத் தொண்டு ஆற்றிய காலத்தில் கொற்கையை ஆய்வு செய்து அங்கு கிடைத்த பழமையான முதுமக்கள் தாழியைக் கண்டறிந்திருக்கிறார்.

இன்றைய சங்க கால கொற்கையில் பழமையான வரலாற்றுச் சின்னங்கள் எதுவுமில்லை. அங்கேயிருப்பது ஒரேயொரு வன்னிமரம். இரண்டாயிரம் வருடப் பழமையான மரம் என்று சொல்கிறார்கள். முறிந்து தரையில் சாய்ந்த நிலையில் காணப்படுகிறது. அதன் முன்பாக நடுகல் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. பாகிஸ்தானில் கூட கொற்கை என்ற பெயரில் ஊர் இருக்கிறது.

பாண்டிய மன்னர்களின் நினைவுகளைச் சுமந்த ஊர்கள் கொற்கையைச் சுற்றிலும் காணப்படுகின்றன. அக்காலத்தில் சேர, சோழ, பாண்டியர்கள் மூவருக்கும் இரண்டு தலைநகரங்கள் இருந்தன. சேரருக்கு வஞ்சி மற்றும் முசிறி. சோழருக்கு உறையூர் மற்றும் பூம்புகார்.பாண்டியர்களுக்கு கொற்கை மற்றும் மதுரை. இந்த இரண்டு தலைநகரங்களில் ஒன்று நிர்வாகத்திற்கும் மற்றொன்று வணிக மையமாகவும் இருந்திருக்கின்றன.

**வினாக்கள்**:

1) சங்க காலத்தின் பெரிய துறைமுக நகரம் எது?
அ) பாகிஸ்தான் ஆ) கொற்கை
இ) சென்னை ஈ) ஆதிச்சநல்லூர்

2) இன்று, கொற்கை கடலில் இருந்து எத்தனை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது?
அ) 6 ஆ) 15 இ) 2000 ஈ) 10

3) பாண்டியர்களின் இரண்டு தலைநகரங்களின் பெயர்களை எழுதுக.

அ) உறையூர், பூம்புகார் ஆ) வஞ்சி, முசிறி

இ) கொற்கை, மதுரை ஈ) பாகிஸ்தான், ஆதிச்சநல்லூர்

4) வன்னிமரம் எத்தனை வருடங்கள் பழமையானது?

அ) 15 ஆ) 6 இ) 2500 ஈ) 2000

5) முதுமக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்ட ஊர் எது?

அ) முசிறி ஆ) கொற்கை

இ) மதுரை ஈ) உறையூர்

**3. கீழ்வரும் பகுதியைப் படித்து அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக:. (1x 5 = 5)**

.

மனிதர்களின் முதல் உற்பத்தி தொடங்கியது மண்ணில்தான். ஆனால் இன்றைய நவீன உற்பத்தி முறை இந்த மண்ணைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் இயற்கையை உயிர்ப்பொருளாகப் பார்த்தவர்கள். ‘மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே’ என்பதுதான் தமிழர்கள் பார்வை.

ஜெர்மன் மற்றும் டென்மார்க் நாட்டிலிருந்து சூழல் அறிவியலில் முனைவர் பட்டம் பயிலும் பல்கலைக்கழக மாணவர்கள் தமிழகத்திலுள்ள ஒரு பல்கலைக்கழகத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் தமிழ்ச் சூழலியல் குறித்து கற்றுக் கொண்டனர். தமிழர்கள் இயற்கையை உயிர்ப்பொருளாகப் பார்த்தவர்கள் என்பதை புரிந்து கொண்டனர். ஒரு ஜெர்மன் மாணவி தமிழர்கள் அன்றே சொன்ன இந்தக் கருத்தை இன்றைய நவீன அறிவியல், ஆழ்ந்த சூழலியல் என்று அழைக்கிறது என்றார். ஆழ்ந்த சூழலியல் என்பது மனிதன் தொடங்கி நுண்ணுயிர் வரை அனைத்துக்கும் சம உரிமை உண்டு என்பதே ஆகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இதனை வள்ளுவர், ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று கூறிவிட்டார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, ஆழ்ந்த சூழலியல் பேசிய நமது அறிவு வெளி நாட்டினரை வியக்க வைத்தது.

---

**பகுதி –ஆ (எழுதுதல்) மதிப்பெண்கள் - 14**

**SECTION- B (Writing) Marks – 14**

---

**4. (1x 6 = 6)**

(i) அ) உங்கள் பகுதியில் நூலக வசதி வேண்டி மாநகராட்சி தலைவருக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

**( அல்லது )**

(ii) ஆ) உங்கள் பகுதியில் குழந்தைகள் விளையாடி மகிழ்வதற்கும், பொதுமக்கள் நடைப்பயிற்சி பழகுவதற்கும் ஏற்ற பூங்கா ஒன்று அமைத்துத் தருமாறு மாநகராட்சித் தலைவருக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

(*குறிப்பு :* **இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி ச. பொன்னன் / ச. பொன்னி , எண்.29, வள்ளியூர் வீதி, திண்டுக்கல் என்று கொள்க)**

5. **ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (1x 8 = 8)**

(i) ஒழுக்கத்தின் உயர்வு – இதிகாசங்கள் காட்டும் நல்லொழுக்கம் – மாணவரும் ஒழுக்கமும் – ஒழுக்கத்தினால் ஏற்படும் நன்மைகள் – காந்தியின் வாழ்க்கை – ஒழுக்கம் உடைமை – உலகை காக்கும் ஒழுக்கம் – முடிவுரை.

(ii) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை – பாரதியின் கூற்று – வேற்றுமையில் ஒற்றுமை – பாரதத்தின் வலிமை – உலக மக்களுடன் உறவில் மேன்மை – யாதும் ஊரே யாவரும் கேளிர் – ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – முடிவுரை.

(iii) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் – காய்கறிகள் – பழங்கள் – கீரைகள் யோகா பயிற்சி – உடற்பயிற்சி ஆரோக்கியமான வாழ்வு – சரிவிகித உணவு முறை – பாரம்பரிய உணவு – சிறுதானியங்கள் – வருமுன் காப்போம் – முடிவுரை.

---

## பகுதி – இ (இலக்கணம்) மதிப்பெண்கள் - 15
## SECTION-C (Grammar) Marks – 15

---

**6. சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3 X 1 = 3)**

1. தனிமொழி
   அ) கண் ஆ) பலகை இ) படம் பார்த்தான் ஈ) எட்டு

2. எதிர்மறைத் தொழிற்பெயர்
   அ) நடவாமை ஆ) நடத்தை இ) நடந்தான் ஈ) நடைபோடு

3. உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை
   அ) மதுரைக்குச் சென்றார் ஆ) மலர்க்கை
   இ) மார்கழித் திங்கள் ஈ) தேர்ப்பாகன்

4. விரியுவமை
   அ) கயல்விழி ஆ) முழவு உறழ் தடக்கை
   இ) முத்துப்பல் ஈ) தேன்மொழி

5. மூவசைச் சீர்
   அ) வந்தனம் ஆ) வணக்கம் இ) வரவேற்பு ஈ)வருகை

**7. நிரப்புக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3 X 1= 3)**

1. நிலமும் பொழுதும் ……………… எனப்படும்.
   அ) உரிப்பொருள் ஆ) கருப்பொருள்
   இ) பெரும்பொழுது ஈ) முதற்பொருள்

2. இருசொற்களுக்கு இடையில் உம் என்னும் இடைச்சொல் மறைந்து வருவது ……………… ஆகும்.
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
   இ) உம்மைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

3. ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு கூட்டிப் பொருள் கொள்ளுதல்……………. ஆகும்.
   அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஆ) நிரல்நிறைப் பொருள்கோள்
   இ) கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்

4. யாமம் என்பது …………… நிலத்தின் சிறுபொழுது ஆகும்.
   அ) குறிஞ்சி ஆ) முல்லை
   இ) மருத ஈ) நெய்தல்

5. புறத்திணை ………….. வகைப்படும்.
   அ) பத்து ஆ) பன்னிரண்டு இ) ஐந்து ஈ) ஏழு

**8. கூறியவாறு செய்க: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3 X1 = 3)**

1. படித்தான் பாரி (பெயரெச்சமாக்குக)
   அ) பாரி படித்துச் சென்றான் ஆ) பாரி படித்தான்
   இ) பாரி படிக்கின்றான் ஈ) படித்த பாரி

2. அமுதமொழி (தொகா நிலைத் தொடராக்குக)
   அ) மொழியமுது ஆ) அமுதம் போன்ற மொழி
   இ) அழகு மொழி ஈ) அமுதம் மொழி

3. பறந்தன (ஒன்றன்பாலாக்குக)
அ) பறவைகள் ஆ) பறக்கின்றன
இ) பறந்து கொண்டிருக்கின்றன ஈ) பறந்தது.

4. படித்தான் (வினையெச்சமாக மாற்றுக)
அ) படித்த பையன் ஆ) படித்தான் கண்ணன்
இ) படித்து வந்தான் ஈ) படித்தான் வென்றான்

5. இதைச் செய்வாயா? (நேர்விடை எழுதுக)
அ) செய்ய மாட்டேன் ஆ) செய்வேன்
இ) செய்ய வேண்டுமா? ஈ) நீயே செய்

**9. இலக்கணக் குறிப்பு தருக: (மூன்றனுக்கு மட்டும்) (3 X 1 = 3)**

1. பாம்பு பாம்பு
அ) இரட்டைக்கிளவி ஆ) பொதுமொழி
இ) அடுக்குத்தொடர் ஈ) தொழிற்பெயர்

2. இனியன் கவிஞர்
அ) எழுவாய்த்தொடர் ஆ) விளித்தொடர்
இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

3. ஊறுகாய்
அ) வினைத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

4. போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
‘வாரல்’ என்பனபோல் மறித்துக்கை காட்ட
அ) தீவக அணி (ஆ) நிரல்நிரை அணி
இ) தற்குறிப்பேற்ற அணி ஈ) தன்மையணி

5. கத்துங் குயிலோசை
அ) திணை வழுவமைதி ஆ) இட வழுமைதி
இ) கால வழுவமைதி ஈ) மரபு வழுவமைதி

**10. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக:(மூன்றனுக்கு மட்டும்)(3 X 1 = 3)**

1. அ) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகக் திரிந்து அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.
ஆ) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகக் திரிந்து அளபெடுப்பது செய்யுளிசை அளபெடை ஆகும்.
இ) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகக் திரிந்து அளபெடுப்பது ஒற்றளபெடைஆகும்.
ஈ) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகக் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

2. அ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் - காட்டுக்கோழி, மயில்
ஆ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் - நாரை, அன்னம்
இ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் - கிளி, மயில்
ஈ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் - புறா, பருந்து

3. அ) வினா ஐந்து வகைப்படும்.
ஆ) வினா ஆறு வகைப்படும்.
இ) வினா எட்டு வகைப்படும்.
ஈ) வினா ஏழு வகைப்படும்.

4. அ) வைகறை - காலை 6 மணிமுதல் 10 மணிவரை
ஆ) வைகறை - பிற்பகல் 2 மணிமுதல் மாலை 6 மணிவரை
இ) வைகறை - இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை
ஈ) வைகறை - இரவு 2 மணிமுதல் இரவு 2 மணிவரை

5. அ) பாடாண் திணை – ஆண்மகனின் சிறப்பைக் கூறுகிறது.
ஆ) பாடாண் திணை – பெண்மகளின் சிறப்பைக் கூறுகிறது.
இ) பாடாண் திணை – போரின் சிறப்பைக் கூறுகிறது.
ஈ) பாடாண் திணை – பாடலின் சிறப்பைக் கூறுகிறது.

---

**பகுதி – ஈ (இலக்கியம்) மதிப்பெண்கள் - 36**
**SECTION - D (Literature) Marks –36**

---

**11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக: (5x 1 = 5)**

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையை தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். தமிழ் நாட்டைத் தனித்து நோக்கினாலும் வாரலாற்றுச் சிறப்புக்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றன. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26 ஆம் நாள் சென்னை ஆயிரம் விளக்கு வட்டம் சால்வன்குப்பம் என்னும் பகுதியில் நான் பிறந்தேன். நான் பிறந்த வட்டத்திற்கு ஆயிரம்விளக்கு எனப் பெயர் இருப்பினும் என்னைப் பெற்றெடுத்த குடும்பம் வறுமை என்னும் இருள் சூழ்ந்ததுதான். என் தந்தையார் பெயர் பொன்னுசாமி. அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் எனக்கு இட்ட பெயர்

ஞானப்பிரகாசம். ஆனால் சரபையர் என்ற முதியவர் ஒருவர் என்னுடைய பெயரை மாற்றி சிவஞானி என்றே அழைத்தார். பின்னாளில் எனக்கு இட்டு அழைத்த சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

**வினாக்கள்**:

1. சத்தியாக்கிரகம் என்னும் அறப்போர் முறை தொடங்கிய ஆண்டு எது?
2. ம.பொ.சி.யின் பெற்றோர் யாவர்?
3. ம.பொ.சி பிறந்த ஊர் எது?
4. பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் என்ன?
5. சிவஞானி என்று ம.பொ.சி. அவர்களை அழைத்தது யார்?

12. **கீழ்க்காணும் செய்யுளடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக:** **(4 x 1 = 4)**

உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெ லாம்
இறங்குகின்றது! இன்று காண்; எழுந்திராய்! எழுந்திராய்!
கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,
உறங்குவாய், உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய்!

**வினாக்கள்**:

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
   அ) பெருமாள் திருமொழி ஆ) பெரியபுராணம்
   இ) கம்பராமாயணம் ஈ) மெய்க்கீர்த்தி

2. உறங்குகின்றவன் யார்?
   அ) இலக்குவன் ஆ) குகன் இ) இராமன் ஈ) கும்பகர்ணன்

3. இப்பாடல் இடம் பெற்ற நூல் எத்தனை காண்டங்களை உடையது?
   அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

4. இப்பாடலின் ஆசிரியர் யார்?
   அ) கம்பர் ஆ) குலசேகர ஆழ்வார்
   இ) குமரகுருபரர் ஈ) சேக்கிழார்

**13. கோடிட்ட இடங்களை நிரப்புக:** **(4 x ½ = 2 )**

1. எப்பொருள் ………….. தாயினும் அப்பொருள்
   ……………… காண்ப தறிவு.
2. ஆள்வினையும் ஆன்ற …………….. மெனவிரண்டின்
   நீள்வினையால் …………. குடி.

**14. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை எழுதுக: (2 x 4 = 8)**

1. புலவர் இடைக்காடனார் குரலுக்கு இறைவன் செவி சாய்த்த நிகழ்வை விளக்குக.
2. காலக் கணிதம் கவிஞன் என்பதைக் கண்ணதாசன் பாடல் வழி விளக்குக?
3. கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விளக்குக.
4. கோசல நாட்டின் வளத்தை எழுதுக.

**15. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை எழுதுக: (2 x 5 = 10)**

1. மனிதனால் காற்று மாசுபடுவதையும் அதனைத் தடுக்கும் வழி முறைகளையும் விளக்குக.
2. செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள் யாவை?
3. நிகழ்கலை குறித்தும், அது எவ்வாறு மக்கள் வாழ்வியலோடு பிணைந்திருக்கிறது என்பதையும் விளக்குக.
4. தமிழ்மொழியிலுள்ள சொல்வளம் பற்றி கால்டுவெல் கூறுவன யாவை?
5. மொழிபெயர்ப்பைப் பயன்கலை எனக் குறிப்பிடுவதேன்?

**16. ஏதேனும் ஒரு தலைப்பில் மட்டும் துணைப்பாடக் கட்டுரை எழுதுக: (1 x 7 = 7)**

1. கோபல்லபுரத்து மக்கள்
2. இராமனுசர்
3. மங்கையராய்ப் பிறப்பதற்கே

*************